ஏழைகளுக்கு உதவும் வகையிலே, அவர்களை வாழவைக்கும் வகையிலே இருக்குமென்று எண்ணுகின்ற காரணத்தாலேதான் இதை உடனடியாகக் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகராட்சியில் நகராட்சி பாஞ்சாலை மைதானம் என்ற இடம் நகர அளவு எண். 564 அமைந்துள்ள அரசு புறம்போக்கு கிராம நத்தம் சுமார் 0.32 ஏக்கர் ஆகும். இந்த நிலத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாளங்காடி அமைக்க திருப்பத்தூர் நகராட்சி மன்றம் முடிவு செய்தது. ஆனால் மேற்படி நிலத்தினை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யவோ, குத்தகைக்கு விடவோ இயலாது என வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததை அடுத்து நாளங்காடி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் கூறுகின்ற இடம் அந்த இடமல்ல. நான் கூறுகின்ற இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம், கோயிலில் இருக்கின்ற அறங்காவலர்கூட அங்கு காய்கறி கடைகள் வைத்துத் தான் அன்றாடம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வசூல் யாருக்கோ போவதைவிட அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையிலே அந்தக் கடைகளைக் கட்டித் தந்தால் அந்தக் கடைகள் மூலம் அரசுக்கு வருமானமும் வரும்; அவர்களும் பிழைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய ஒரு நல்ல காரியத்தை செய்ய முடியும்; எனவே அந்தக் காரியத்தை அரசு உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, பாஞ்சாலை மைதானம் என்பது கிராம நத்தம், புறம்போக்கு. நகர் அளவு எண். 364. பாஞ்சாலை என்ற இடத்தில் இது ஊர் நத்தம் என்ற குறிப்புத்தான் என்னிடத்திலே வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு தகவல் விரும்புவார்களேயானால் தனிக் கேள்வி போடவும் அல்லது என்னிடத்திலே எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி மன்றங்களில் தெரு விளக்குகள் அமைக்க நிதியுதவி.

135—(*வினா எண். *612*)—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

[1989 ஏப்ரல் 26

தெரு விளக்குகளை பராமரிக்கவும், புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், ஊராட்சி மன்றங்களுக்கு நிதி உதவ அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊராட்சி நிர்வாகத்தில் இருக்கிற தெரு விளக்குகளெல்லாம் எங்குமே எரிவது கிடையாது என்பது அனைவருக்குமே தெரிந்த ஒட்டுமொத்தமான கருத்தாகும். ஆகவே, அந்த விளக்குகளைப் போட வேண்டுமென்ற கோரிக்கைகள் வருகின்றபொழுது அவர்கள் நிதி இல்லை. ஆதாரம் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, நிதியாதாரம் கொடுத்தால்தான் அந்த விளக்குகள் எரிய முடியும். நம்முடைய திட்டமெல்லாம் மின்சார விளக்குகள் எரிய வேண்டுமென்பதுதான். ஆனால் அந்தத் திட்டம் கிராமங்களிலே செயல்படுவதற்கு போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் அது செயல்பட முடியவில்லை. ஆகவே, நிதியாதாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஊராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஊராட்சி மன்றத்திற்குச் சேர்ந்தது. அப்படி ஊராட்சி மன்றம் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டால் கூட, உடனடியாக ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து பல்புகளை வாங்கி, பழுதடைந்த பல்புகளை மாற்றிவிட்டு, பிறகு ஊராட்சி மன்றத்திற்கு நிதி வந்தால் பிடித்துக் கொள்ளலாம் என்றும் சமீபத்தில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தமிழகமெங்கும் தெரு விளக்கு எரியவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதைப் போல ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்துகூட அவர்கள் கடன் பெறுகின்றார்கள். ஆனால் வருமானமேயில்லாத ஊராட்சி மன்றம் எங்கு செல்வது என்பதுதான் பிரச்சனை, ஏனென்றால், அந்த கடனை திருப்பி அடைக்க வேண்டுமல்லவா ? அதற்கு வேறு வழி கிடையாது. ஆகவே தான், நான் சொன்னேன். அப்படியில்லாவிட்டால், மின்சாரத் துறையிடம் மூலமாக அதை ஒப்படைத்துவிட்டால்கூட அதைப் பராமரிப்பதற்கு சௌகரியமாக இருக்குமென்று நான் தெரிவித்து, அது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆயிரக்கணக்கான கோடி கடன்பெரும் சங்கடத்திற்கு அது ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். பொதுவாக, இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. கிராமங்களில் அல்லது நகரங்களில், தெரு விளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு உள்ளாட்சி நிர்வாகத்திடமே இருக்க வேண்டுமென்பது ஒன்று. இன்னொன்று, மின்சார வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்து. இந்த இரண்டு கருத்துக்களையும் பரிசீலித்துத்தான் பிறகு முடிவு செய்ய வேண்டும்.

கீழ் பவானி பாசனப் பகுதி.

136—(*வினா எண். 252)—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி வட்டம் சந்திராபுரம் புங்கங்காட்டு கிராமம் கீழ் பவானி பாசனத் திட்டத்தில் இருந்து கழிவுநீர் பாசனத்தில் பாசனப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளதை மாற்றி மீண்டும் கீழ் பவானி பாசனப் பகுதியில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) ஆம்.

(ஆ) அந்த மனுக்கள் மீது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடைய பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கீழ் பவானி பாசனத் திட்டத்திலேயிருந்து எந்த ஆண்டு கழிவுநீர் கசிவுநீர்ப் பாசனத் திட்டத்தில் இணைக்கப்பட்டது ? இப்பொழுது குறிப்பிட்ட நாளுக்குள்ளேயே மீண்டும் கீழ் பவானி பாசனத் திட்டத்திலே இணைத்துக் கொள்ளுகின்ற பரிசீலனையைச் செய்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர்வர்களே, நான் காண்டுக் காலத்திற்கு முன்னால் இது கீழ் பவானியாற்றின் பாசனத் திட்டத்திலேயிருந்து எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரி